வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஓ.மு.எண். 4590 /ஆ4/2025 நாள்.11.09.2025

பொருள் பள்ளிக்கல்வி – டேராடூனில் உள்ள ராஷ்ட்ரிய இராணுவ கல்லூரியில் மாணவர்களை (ஆண்கள் மற்றும் பெண்கள்) சேர்க்கைக்கான தகுதித்தேர்வு – ஜூலை –2026– காலத்திற்கான சேர்க்கை தேர்வு சார்ந்து –அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளமை –மானவர்களுக்கு அறிவுறுத்திட பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவித்தல் – சார்பு

பார்வை 1.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள் ந.க.எண். 034349 /கே/இ3/2025 நாள்.08.09.2025

2. சென்னை 03, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தேர்வுகள் கட்டுபாட்டாளரின் கடிதம் 1942/ QD- A1/ 2025-3, நாள். 22.08.2025

-----

பார்வை1–ல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி மற்றும் இணை இயக்குநரின்(தொழிற்கல்வி) செயல்முறைகளுக்கிணங்க டேராடூன், ராஷ்ட்ரிய மிலிட்டரி காலேஜின் அறிவிக்கை எண். EE/ Dec 25/ NT, நாள். 07.08.2025–ல் கண்டுள்ளவாறு, பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கிலம் வழியில் பயிலும் மாணவ / மாணவியர்கள் டேராடூன், ராஷ்ட்ரிய மிலிட்டரி காலேஜில் (எட்டாம் வகுப்பு ) VIII ஆம் வகுப்பில் சேர்க்கை பெறுவதற்காக ஜூலை –2026 காலத்திற்கான சேர்க்கை தேர்வு (Examination for Admission) சார்ந்து அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்காணும் விவரத்தினை பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு விளம்பரப்படுத்தும் பொருட்டு பதிவிறக்கம் செய்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கும்படியும், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் அறியும் வகையில் பள்ளி தகவல் பலகையில் ஒட்டிவைக்கும்படி அனைத்து வகை பள்ளித்தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக்பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : பார்வையில் காணும் கடிதத நகல்
மற்றும் அறிவிக்கை நகல்

//ஒம்.சு.தயாளன் //
முதன்மைக் கல்வி அலுவலர்,(பொ)
வேலூர்.

பெறுநர்

- அனைத்து அரசு பள்ளிகள்,அரசு உதவி பெறும் பள்ளிகள் /மாநகராட்சி/நகராட்சி /ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் ,வேலூர் மாவட்டம்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி) அவர்களுக்கு தகவலுக்காகவும் ,தொடர்நடவடிக்கைக்காவும் அனுப்பப்படுகிறது.

| QUALIFYING EXAMINATION FOR ADMISSION OF STUDENTS TO THE RASHTRIYA INDIAN MILITARY COLLEGE, DEHRADUN FOR THE JUL 2026 TERM | |
|---|---|
| Last date for acceptance of applications by State Governments | 15 Oct 2025. |
| Conduct of written exam | 07 Dec 2025. |
| Conduct of viva-voce of only those candidates who qualify the written exam | Dates will be intimated later by RIMC |